.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 76/2023 Crime No. 57/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW2-/LW-2- செந்தில்குமார் | Village | |
| Father Name | அம்மாசை | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 03.06.2024 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை-**

நான் வாய்க்கால்பாளையத்தில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரிஷனாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.02.2023 ம் தேதியன்று, அதிகாலை சுமார் 05.30 மணியளவில், நான் பவானிக்கு மோட்டார் வேலையாக சென்றுவிட்டு வந்துகொண்டிருந்தபோது, எனது வீட்டிற்கு அருகில் எனக்கு முன்னால் சுமார் 100 அடி தூரத்தில் பின்னர் நான் தெரிந்துகொண்ட இந்த விபத்தில் இறந்துபோன நபரான சோலை கவுண்டர் ஒரு XL வண்டியை அந்தியூர் நோக்கி ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். அவர் சென்ற வண்டிக்கு பின்னார் 2 பேர்கள் யமாஹா கம்பெனியை சேர்ந்த பைக்கில் அந்தியூரை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். அப்போது விடியற்காலை என்பதால் இருட்டாக இருந்தது அதனால் வண்டியின் நிறம் மற்றும் மாடல் தெரியவில்லை, அந்த வண்டியை வயதான ஒரு நபர் ஓட்டிச் சென்றார். அந்த வண்டியில் ஆஜர் எதிரி பின்புறம் அமர்ந்து சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்ற XL வண்டியை ஓட்டிச் சென்ற நபர் திடிரென்று மண் ரோட்டிற்கு செல்லக்கூடாது என்று வலதுபுறம் சற்று ஏறினார். அப்போது அவர் பின்னால் வந்த யமாஹா பைக் அவர் மீது பக்கவாட்டில் மோதிவிட்டது.

நான் விபத்து நடந்த பகுதிக்கு சென்று பார்த்தபோது XL வண்டியில் சென்ற நபருக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. கூட்டம் சேர்ந்தமையால் யமாஹா வண்டியில் வந்தவர்களுக்கு என்ன அடிப்பட்டது என்று பார்க்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்தில் கரண்ட் மின் கம்பம் உள்ளது ஆனால் அன்று மின்விளக்கு எரியவில்லை. அதனால் இருட்டாக இருந்தது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 76/2023 Crime No. 57/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW-1- செங்கோட்டையன் | Village | |
| Father Name | சோலை கவுண்டர் | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 03.06.2024 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை-**

நான் அம்மன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சோலை கவுண்டர் என் அப்பா ஆவார். கடந்த 23.02.2023 ம் தேதியன்று, காலையில் நான் வீட்டிலிருந்தபோது எனது அப்பாவிற்கு வாய்க்கால்பாளையம், மேல் காலனி அருகில் பைக் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார்கள். நான் உடனடியாக சம்பவயிடம் சென்று காயப்பட்ட எனது அப்பாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஒரு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் என் அப்பா இறந்துவிட்டதால் மீண்டும் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். பின்னர் பவானி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சி தனது முதல் விசாரணை தொடர்ச்சியாக இந்த விபத்தை முனுசாமி ஏற்படுத்தியதாக இந்த விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் என்னிடம் கூறினார்கள் என்றும், இந்த எதிரி அன்று அந்த வாகனத்தை ஓட்டிச் செல்லவில்லை என்றும், போலீசார் விபத்து ஏற்படுத்திய வாகனம் ஓட்டிய நபரை மாற்றியுள்ளார்கள் என்றும் எதிரி விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்த நபர்தான் என்று நேரில் பார்த்தவர்கள் என்னிடம் கூறினார்கள்.

போலீசார் நான் விபத்தை நேரில் பார்க்காததால் மணிகண்டன்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்று கூறியதால் நான் அளித்த புகாரில் மணிகண்டன் என்று குறிப்பிட்டுள்ளேன்.

**(இந்த சாட்சி விபத்தை நேரில் பார்க்கதாததால் இவரது சாட்சியத்தை இந்த நீதிமன்றம் நீதியின்பால் கருத்தில் வைத்துக் கொள்கிறது. இந்த விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அளிக்கும் சாட்சியத்தை வைத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.)**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததார்.**